**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2022 செத்தெம்பர் 02 நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022இன் 03ஆம் இலக்கம்**

## வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தல்

**1. சட்ட ஏற்பாடுகள்**

1.1 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற அனைத்து நிதிக் கம்பனிகளினதும் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதன் மீது இப்பணிப்புரைகளை அறிமுகப்படுத்துகின்றது.

**2. பணிப்புரைகளின் குறிக்கோள்கள்**

2.1 இப்பணிப்புரையானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் உதவித் திட்டத்தின் மூலம் தகவல்களை தொகுப்பதனை வசதிப்படுத்தி நிதியியல் துறையின் முக்கிய கொள்கைத் தீர்மானங்களுக்காக தகவல் முகாமைத்துவச் செயன்முறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் ஒருமைப்பாட்டினையும் வலுப்படுத்துவதற்கு அனைத்து நிதிக் கம்பனிகளினதும் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்வதை பொறுப்பாணையளிப்பதற்கு வழங்கப்படுகின்றது.

**3. வைப்பாளரின் தனித்துவமான அடையாள இலக்கத்தினைப் பதிவுசெய்தல்**

3.1 அனைத்து நிதிக் கம்பனிகளும் இணைப்பு I இன் அட்டவணை 1இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு தமது மையத்தகவல் முறைமையில் ஒவ்வொரு வைப்பாளருக்கும் தனித்துவமான அடையாள இலக்கத்தினைப் பதிவுசெய்து அறிக்கையிடுதல் வேண்டும்.

**4. செயற்பாட்டுக்கு வரும் திகதி**

4.1 இப்பணிப்புரைகள் 2022.10.01 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும். அதற்கமைய, அனைத்து நிதிக் கம்பனிகளும் கீழே 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மாறுதலடைதல் ஏற்பாடுகளுக்குட்பட்டு அனைத்து புதிய வைப்பாளர்களுக்கும் 2022.10.01 தொடக்கம்

நடைமுறைக்குவரும் வகையில் இப்பணிப்புரைகளின் தேவைப்படுத்தல்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

**5. மாறுதலடைதல் ஏற்பாடுகள்**

5.1 அனைத்து நிதிக் கம்பனிகளும் 2023.12.31ஆம் திகதியளவில் இப்பணிப்புரைகளின் நியதிகளுக்கமைய ஏற்கனவேயுள்ள அனைத்து வைப்பாளர்களினதும் தனித்துவமான அடையாள இலக்கங்களைப் பதிவுசெய்தலை நிறைவுசெய்தல் வேண்டும்.

**முனைவர். நந்தலால் வீரசிங்க**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**இணைப்பு I**

**அட்டவணை 1: நிதிக் கம்பனிகளின் ஒவ்வொரு வைப்பாளர்கள் வகைக்குமான தனித்துவமான அடையாள இலக்கங்கள்**

| # | வைப்பாளரின் வகை | அடையாள இலக்கத்தின் வகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| 1 | **தனிப்பட்டவர்கள்** | | |
| 1.1 | இலங்கைப் பிரசைகள் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | கணக்குகளை ஆரம்பிப்பதற்கு நிதிக் கம்பனிகள், வைப்பாளரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அவர்களது முறைமையில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைப் பதிவுசெய்வது கட்டாயமாகும். |
| 1.2 | இலங்கைப் பிரசைகள் (இலங்கைக்கு வெளியில் வதிகின்ற/ நிரந்தர வதிவிடத்தை வைத்திருப்பவர்கள், தற்காலிக வதிவிடத்தை வைத்துள்ளவர்கள்), இரட்டைப் பிரசாவுரிமையுடைய இலங்கையர்கள் (இலங்கையில் வதிகின்ற), இரட்டை பிரசாவுரிமையுடைய இலங்கையர்கள் (இலங்கைக்கு வெளியில் வதிகின்ற) | தேசிய அடையாள அட்டை இலக்கம் | வைப்பாளரினால் தேசிய அடையாள அட்டை தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற போது மாத்திரம் இலங்கை கடவுச்சீட்டு இலக்கம் பயன்படுத்தப்படலாம். |
| 1.3 | இலங்கையரல்லாத பிரசைகள் | வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கம் | இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டுத் தேசத்தவர்கள் (இலங்கைக்கு வெளியில் வதிகின்ற), இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது விஜயம் செய்வதற்கு உத்தேசிக்கின்ற வெளிநாட்டுத் தேசத்தவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்ளடங்கலாக |
| 1.4 | பராயமடையாத வைப்பாளர்கள் | பிறந்த திகதி + பிறப்புச் சான்றிதழ் இலக்கம்<br>உ-ம்:<br>பிறந்த திகதி: 2005 சனவரி 07 (2005.01.07)<br>பிறப்புச் சான்றிதழ் இலக்கம்: 0325<br>\| 2 \| 0 \| 0 \| 5 \| 0 \| 1 \| 0 \| 7 \| 0 \| 3 \| 2 \| 5 \| | அதே கூண்டில் 12 இலக்கங்களை உருவாக்குவதற்கு பிறந்த திகதியைத் தொடர்ந்து பிறப்புச் சான்றிதழ் இலக்கம் |
| **2.** | **நிறுவனங்கள்** | | |
| 2.1 | கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் | கம்பனிப் பதிவிலக்கம் | - |
| 2.2 | அரசுசாரா அமைப்புக்கள் | அரசுசாரா அமைப்புகளுக்காக தேசிய செயலகத்தினால் வழங்கப்பட்ட பதிவிலக்கம் | - |
| 2.3 | தனியுரிமை/ பங்குடமை/ இணைந்த கூட்டு முயற்சிகள் போன்ற பிரதேச/ உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் | வியாபாரப் பதிவிலக்கம் | - |
| 2.4 | கழகங்கள், அமைப்புக்கள், சங்கங்கள் போன்ற ஏனைய அனைத்து நிறுவனங்களும் | இயைபுடைய அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவிலக்கம் | - |